# எட்டுத்தொகை நூல்களில் இடம் பெயர்வு

# Migration in Ettuthogai Literatures

***முனைவர் கி.பே.மோகனாம்பிகா***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
ஈரோடு, இந்தியா

**Dr. K.P. Mohanambika**
*Assistant Professor, Department of Tamil*
*Vellalar College for Women (A)*
*Erode, India*

## ஆய்வுச் சுருக்கம்

*இயக்கம் என்பது மானிடத் தத்துவம். பூமி சுற்றுவதால் உலகம் நிலைத்திருக்கிறது. மனிதன் இயங்கினால் தான் வாழ்க்கை. இயக்கம் நிற்கும் பொழுது மரணம். எனவே இடம் பெயர்தல் என்பது வாழ்க்கைச் சக்கரம் போல் சுழன்று கொண்டே இருக்கும். விருப்பு வெறுப்புக்கு அங்கே இடமில்லை. தனி மனிதனோ, சிறுகூட்டம் ஒன்றோ தம் இருப்பிடத்தை நிலையான ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றிச் செல்வதை இடப்பெயர்வு என்று வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகிறது. சங்க கால மக்கள் தங்களுடைய வாழ்வியலை அகம், புறம் என்று பாகுபடுத்தினார்கள். அகப்புற வாழ்க்கைகள் தேரின் இரு சக்கரம் போல் இணையாகப் போற்றப்பட்டது. இடம் பெயர்வு இரு வாழ்க்கையிலும் இருந்தது. இரு நிலைகளிலும் தற்காலிகமான இடம் பெயர்வு அதிகம் காணப்பட்டது*

## Abstract

*Movement is human philosophy. The world is stable because the earth rotates. Life is only if man works. Death happens when movement stops. So migration keeps turning like the wheel of life. There is no room for likes and dislikes. Migration refers to the movement of an individual or a small group from one fixed place to another. People of the Sangam period divided their life into internal and external. Inner lives were admired parallel to the two wheels of the chariot. Migration was present in both lives. Temporal displacement was observed in both cases.*

**Citation**

Mohanambika, KP. “Migration in Ettuthogai Literatures.” *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 1, 2024, pp. 7–13.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20069393*

**முன்னுரை**

***திங்களோடும் செழும்பரிதி தன்னோடும்***
***விண்ணோடும் உடுக்களோடும்***
***பொங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழ்'***

*என்பார் பாரதிதாசன். தொன்மை, இயன்மை, தூய்மை, தாய்மை, முன்மை, வியன்மை, வளமை, மறைமை, எண்மை, இளமை, இனிமை, தனிமை, ஒண்மை, இறைமை, அம்மை, செம்மை என்று பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது தமிழ். தமிழன் என்றோர் இனம் உண்டு தனியே அதற்கோர் திறம் உண்டு. அத்திறம் பன்னாளில் சிறந்து விளங்கியது. மண்ணும் இமயமலை எங்கள் மலையே என்று மார்தட்டிக் கூறியவன் தமிழன். கங்கையும் காவிரியும் எங்கள் நதியே என்று இறுமாந்து பாடியவன் தமிழன். பஞ்சநதி பாயும் பழனத் திருநாடு எங்கள் நாடே என்று நெஞ்சினை நிமிர்த்தி பேசியவன் தமிழன்.*

*'நாவலந்தண்பொழில்' என்று அறியப்பட்ட தமிழ்க்கூறு நல்லுலகம் உலக நாகரிகங்களுக்கெல்லாம் முந்தைய நாகரிகத்தைத் தன்னகத்தே கொண்டதும், உயர்தனிச் செம்மொழியாம் தமிழைப் பேச்சு மொழியாகவும் எழுத்து மொழியாகவும் இலக்கண வரம்போடு இலக்கியம் யாத்து தமிழினைத் தலை நிமிரச் செய்ததும் உலகியலார் அறிந்த உண்மை. தமிழ் இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்கள் அனைத்தும் பழந்தமிழரின் பண்பாட்டினை அறிந்து கொள்ளும்; கருவூலமாக விளங்குகிறது.செம்மொழி இலக்கியங்களில் இடம்பெயர்தல் என்னும் தலைப்பு அமிழ்தினுமினிய நம் தாய் மொழியின் சிறப்பையும், அதன் மூலம் அறியப் பெறும் வரலாற்று உண்மைகளையும், ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுவதாக அமையும்*

**இடம்பெயர்தல்**

*இடம் பெயர்தல் என்பது ஓரிடத்திலிருந்து நிலைத்திருந்த வாழ்க்கையைப் பிறிதொரு பகுதிக்கு இடம் பெயர்தல் ஆகும். இடம் பெயர்தல் மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ள ஒரு காரணி ஆகும். இச்செயல்பாடு பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் பொருந்தும். இடம்பெயர்தல் மனிதன் என்று தோன்றினானோ அன்றே அவனோடு தோன்றிவிட்டது. ஆதி மனிதன் உணவு உற்பத்தியின் பொருட்டு இடம் பெயர்வை அல்லது நகர்வை மேற்கொண்டான். பதியெழு வறியா பழங்குடியாக வாழ்ந்த மக்கள், நம் மண்ணின் மைந்தர்களோடு இணைந்து வாழ்ந்தனர் என்பதை,*

***சாறயர் மூதூர் சென்று தொக்காங்கு***
***மொழிபல பெருக்கிய பழிதீர் தேயத்தும்***
***புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்***
***முட்டாச் சிறப்பின் பட்டினம்;***

*என்று பட்டினப்பாலை சுட்டுகிறது.*

**இடம்பெயர்வதற்குரிய காரணங்கள்**

*இடம் பெயர்தலைத் தூண்டும் அல்லது நிகழ்த்தும் காரணிகள் எண்ணற்றவை. அரசியல், சமூகம், பொருளாதாரம், இயற்கை போன்றவை இடம்பெயர்வுக்கு முக்கிய காரணிகளாக அமையும். சங்க காலத்தில் அரசர்கள் தாங்கள் வகுத்துக் கொண்ட சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அரசாட்சி நடத்தினார்கள். மக்களை ஒரு நெறிப்படுத்தி வாழ வழி வகுக்கும் ஆட்சித் திறனுடைய மன்னனே இவ்வுலகத்திற்கு உயிர் போன்றவன். இதனைத் தான் ஔவைப்பிராட்டி நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்று பாடி அரசனின் கடமையைச் சுட்டுகிறார். தமிழக அரசியல் வரலாற்றில் அடிக்கடி*

*அரசர்களுக்குள் போர்கள் நடைபெற்றன. போரிலும் ஒரு மனுநீதியினைக் கடைபிடித்தார்கள். அதனால் வேந்தர்களும் படைவீரர்களும், மக்களும் இடம்பெயர்ந்து செல்லும் அவசியம் ஏற்பட்டது. அவ்வாறு போர்கள் நடத்த பொழுது பெண்கள், குழந்தைகள். முதியவர்கள், உடல் ஊனமுற்றோர், நோய்வாய்ப்பட்டவர், வேதியர், பசுக்கள் போன்றவற்றைப் பத்திரமான இடத்திற்கு அழைத்துச் சென்று பாதுகாத்தனர்.*

***ஆவும் ஆனின பார்ப்பன மாக்களும்***
***பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்***
***தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்***
***பொன் போல் புதல்வர்ப் பெறாதீரும்***
***அறத்து ஆறுநுவலும் பூட்கை மறத்தின்*** ***(புறநானூறு -பா9)***

*போருக்குச் செல்வதன் முன் ஆவும், ஆவினதியல்புடைய பார்ப்பாரும், மகளிரும், நோயுடையாரும், பாதுகாத்து தென்புல வாழ்வோராகிய நுங்குடியில் இறந்தோர்க்குச் செய்வதற்கரிய பிண்டோதகக் கிரியைப் பண்ணும் பொன் போலும் பிள்ளைகளைப் பெறாதீரும் என் அம்பு வரைவாகச் செலுத்த கடவோம். ஆகவே நீர் நுமக்கு அரணாகிய இடத்தை அடையும் என்று நெட்டிமையார் பாடல் கூறுகிறது இதிலிருந்து போர் காலத்தில் மக்கள் பாதுகாப்பான இடம் தேடிச் சென்ற அற நெறியினை அறிந்து கொள்ள முடிகிறது.*

*பண்டைய காலம்தொட்டு இன்று வரை அரசியல் நெருக்கடிகள் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் இடம்பெயர்வினை மேற்கொண்டு வருவதை அறியலாம். பழங்காலத்தில் ஒரு நாட்டினைப் பல ஆண்டுகளாக ஆட்சி புரிந்த மன்னர்களின் பரம்பரை வீழ்கின்ற பொழுது வீழ்ந்த அரசுடன் தொடர்புடைய அல்லது உறவுடைய மக்கள் அப்பகுதியில் வாழமுடிடமல் வெளியேறுவார் அல்லது வெளியேற்றப்படுவார்கள். புதிதாக ஆட்சியைக் கைப்பற்றிய மன்னரின் வழியினரும் அவரின் உறவுகளும் பெரும் பகுதியினர் அங்கு குடியேறுவார்கள். புதிய அரசு தனது இன மக்களையும் பெருமளவில் குடியேறுவர். அவ்வாறு குடியேறும் போது அம்மக்களுக்குச் சலுகைகளும் பாதுகாப்பினையும் அளித்தார்கள். பல்வேறு அரசர்களின் வரலாற்றினை நோக்கும்போது பல செய்திகள் புலப்படும். மன்னர்கள் தங்களுடைய எல்லையை விரிவுபடுத்தும் நோக்குடன் அல்லது பகைமை காரணத்துடன் போரிடும் போது மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆட்படுகின்றனர். ஊருக்குத்தீ வைத்தல், விளைநிலங்களை அழித்தல், குடிநீரைப் பாழ்படுத்தல், கொள்ளையடித்தல், கொலை செய்தல், பாலியல் பலாத்காரம் போன்ற தகாத செயல்களில் பகை நாட்டுப் போர் வீரர்கள் ஈடுபாடுவார்கள். அப்பகுதியில் வாழ்பவர்கள் வாழ்வதற்கு அஞ்சி இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்வார்கள். மன்னர்கள் அதிக வரியினை வசூலித்துக் கொடுமைப்படுத்தும்; போதும், பகையரசர்களின் தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் இடம்பெயர்ந்துள்ளர்கள்.*

**ஆநிரை கவர்தல்**

*சங்ககால மக்கள் ஆநிரைகளைத் தங்களுடைய முக்கியச் செல்வமாகவும் பொருளாதாரத்தின் முக்கிய அங்கமாகவும் ஆநிரைகளையே கருதினார்கள். மாடு என்றால் செல்வம் என்று பொருள். ஆநிரை கவர்தல் என்பது போரின் முதல் நடவடிக்கையாக இருந்தது. ஆநிரையைக் கவருதல் அந்நாட்டின் பொருளாதார வளத்தினைக் கவர்வதாகவே இருந்ததால் இரு வேந்தர்களுக்கும் இடையே போர் எழுந்தது. ஆநிரை கவர்தல் தொடர்பாக மறவர்கள் பெயர்ந்து சென்று ஆநிரையைக் கவர்ந்து மீண்டு வந்ததை,*

***சூல்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை***
***வலிக்கூட்டு உணவின் வாட்குடிப் பிறந்த***

***புலிப்போத் தன்ன, புல்அணற் காளை***
***செல்நாய் அன்ன கருவில் சுற்றமொடு***
***கேளா மன்னர் கடிபுலம் புக்கு***
***நாள்ஆ தந்து நறவுதொடை தொலைச்சி***
***இல்அடு கள்இன் தோப்பி பருகி (பெரும்பாணாற்றுப்படை பா.வரி.136-142)***

*அறிய முடிகிறது.*

**நிலம் கவர்தல்**

*மண் கவர்தல்: தொல்காப்பியர் காலத்திலேயே மண் கவர்தல் நிலை பழக்கத்தில் இருந்தது. வேந்தன் தானே படையெடுத்துப் போகுதலும், அவனோடு பொருந்திய தளபதி போன்றோரும் பெயர்தல் உண்டு. ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும், புதுவதன்று இவ்வுலகத்து இயற்கை. தான் ஆளும் நிலப்பகுதி சிறியது என்று விரிவுப்படுத்தி எண்ணுதல், பிறர்நிலப் பகுதிகளைக் கவர்தல் என நிலத்தினைக் கைப்பற்ற பல படையெடுப்புகள் நடத்தப்பெற்றன.*

***தானே சேறலும் தன்னோடு சிவணிய***
***ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே***

*என்று வஞ்சித்திணை நூற்பா கூறுகிறது. கைப்பற்றுதல், கிடைக்காத போது நிலத்தினை அழித்தொழித்தல்; ஆகிய இரண்டும் வேந்தர்களின் செயல்களாய் இருந்தன. கிள்ளிவளவனுக்கும், குட்டுவனுக்கும் நடத்த போரில் கழுமலம் என்னும் ஊர் அழிக்கப்பட்டதும் அதனால் அவ்வூரில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்து வெளியேறிச் சென்ற செய்தியை நற்றிணைப் பாடல் காட்டுகிறது.*

***குட்டுவன்***
***அகப்பா அழிய நூறி, செம்பியன்***
***பகல் தீ வேட்ட ஞாட்பினும் மிகப் பெரிது' (நற்றிணை பா 14,3-5)***

*கோசர்கள் சூழ்ச்சி செய்து நன்னன் எனும் அரசனின் காவல் மரத்தினை வெட்டி வெற்றிமாலை சூடியதால் அங்கு வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்றதைக் குறுந்தொகையும், பாசறையின்கண் தங்கி தான் மேற்கொண்டு வந்த போர்த்தொழில் முடிவடைந்தவுடன் தன் நாடு சென்று தலைவியிடம் இன்பங்களை நுகர்வோம் என்று விரைந்து செல்லும் காட்சியினை ஐங்குறுநூற்றிலும், பகைவர் நிலம் என்ற அவப்பெயரினை நீக்கி தன்நிலம் என்ற சுதந்திர உணர்வினைப் பெற, அவரை வென்று திறை கொண்டு வெல்வேன் என்பதனை*

***'ஏற்றவர் புலம் கெடத் திறை கொண்டு***
***மாற்றாரைக் கடக்க, எம்மறம் கெழு கோவே' ( கலித்தொகை106)***

*கலித்தொகையிலும் காணலாம். ஆரியப்படை இடம் பெயர்ந்து சோழ நாட்டிற்கு வந்தமையும், வேற்று மொழி பேசிய வடுகரும், மோரியாரும் போர் சூழலால் தென்னாடு வந்தமையும் அகநானூறு சுட்டுகிறது.*

***முரண்மிகு வடுகர் முன்னுற, மோரியர்***
***தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு (அகநானூறு. பா67)***

*பதிற்றுப்பத்து முழுவதும் போர்களக் காட்சிகளே மிகுந்துள்ளது. குட்டுவனின் போர் திறமையும் போர் காரணமாக படைகள் இடம் பெயர்ந்து சென்றமையும், அவனால் அழிக்கப்பட்ட நாடுகளிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து சென்றமையைக் குமட்டூர் கண்ணனார் பாடியுள்ளார்.*

*கடவுள் நிலைஇய கல்ஓங்கு நெடுவரை*

***வடதிசை எல்லை இமயம் ஆக***
***தென்அம் குமரியொடு ஆயிடை அரசர்***
***முரசுடைப் பெருஞ் சமம் ததைய, ஆர்ப்பஎழ,***
***சொல் பல நாட்டைத் தொல்கவின் அழித்த***
***போர் அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ !பதிற்றுப்பத்து பாடல் 43)***

*தன்னால் அழிக்கப்பட்ட குடும்பத்தினை மீண்டும் அவர்கள் நாட்டிலேயே மகிழ்ச்சியோடு வாழ வழி செய்தான் குட்டுவன் என்பதைக் 'கெடுகுடி பயிற்றிய கொற்ற வேந்தே' என்ற வரி புலப்படுத்துகிறது.*

*அரசர்களின் வீரத்தினையும், கொடையையும் எடுத்துக் கூறும் வரலாற்றுக் கருவூலமாக விளங்கும் நூல் புறநானூறு. போர் காரணமாக ஏற்பட்ட இடம்பெயர்வுகளையும் அழிவுகளையும் தௌ;ளத் தெளிவாக எடுத்தியம்புகிறது. கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி வடபுலத்து மன்னர்கள் படையெடுத்துச் சென்றான் என்பதை,*

***வடபுல மன்னர்வாட, அடல் குறித்த***
***இன்னாவெம் போர் இயல்தேர் வழுதி (புறநானூறு 52)***

*எடுத்துக் கூறுகிறது. அதாவது பாண்டியன் வடநாட்டு படையெடுப்பு காரணமாக இடம்பெயர்ந்ததை அறியமுடிகிறது.*

**வரிக்கொடுமை**

*பழங்காலத்தில் இலக்கியங்களில் வரிக் கொடுமையினால் மக்கள் மிகுந்த இன்னல்களுக்கு ஆளான போது தங்களுடைய நிலத்தினை விற்று விட்டு நாடு விட்டு நாடு இடம் பெயர்ந்து சென்றார்கள். வேந்தர்கள் மக்களின் நிலையறிந்து வரி விதிக்க வேண்டும்.*

***காய்நெல் லறுத்து கவளம் கொளினே***
***மனநிறை வில்லதும், பன்னாட் காகும்***
***நூறுசெறு வாயினும், தமித்துப்புக் குணினே***
***வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்***
***அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே ..***
***யானை புக்க புலம்போல***
***தானு முண்ணா னுலகமுங் கெடுமே! (புறநானூறு 184)***

*என்ற பாடல் புலவரின் அறிவுரையால் நல்லாட்சி நடத்திய பான்மையினை அறியமுடிகிறது.*

**நாடு காவல்**

*மண்ணைக் கவருதல், அரசர்கள் தம்முள் முரண்படுதல், அரசர்கள் தங்களுடைய எல்லையை விரிவாக்கம் செய்தல், பெண் கவருதல், பிற அரசர்களுக்கு உதவியாகப் படை அனுப்புதல் என்ற நிலைகளில் போர் ஏற்பட்டது. அவ்வாறு ஈடுபட்ட போரினில் வென்றவர் தோற்றவரின் நாட்டை அபகரித்து ஆட்சி செய்தும் தோற்ற அரசனிடம் திறை பெற்று தங்கள் ஆட்சியின் கீழ் வைத்துக் கொள்ளும் வழக்கம் நடைமுறையிலிருந்தது. வென்ற மன்னன் அந்நாட்டை காக்கும் பொருட்டு தனது வீரர்களை அனுப்பி காவல் செய்தனர். இதனை நாடு காவல் என்று வழங்கப்பட்டது. நாடு காவலுக்காகத் தலைவன் பிரிந்து சென்றதை,*

***வகை எழில் வனப்பு எஞ்ச, வரை போக வலித்த நீ***
***புகை அறுபய வினை (கலித்தொகை)***

*கலித்தொகைப் பாடல் சுட்டுகிறது. நாடு காவல் பொருட்டுப் பிரிவேன், பிரியுங்கால் இளவேனில் காலத்து வருவேன் எனக் காலம் குறித்துப் பிரிந்து சென்றதையும் கலித்தொகை காட்டுகிறது.*

**அரசியல் -இடம்பெயர்வு**

*ஓதல் பகையே தூது இவைப் பிரிவே என்ற தொல்காப்பிய நூற்பா அரசியல் பிரிவினைக் குறிக்கும். ஔவையார் அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றதும், நாட்டில் போர் ஏற்படும் போது போர் வீரர்கள் போர்க்களம் செல்லுவதும் அரசியல் காரணமான இடம்பெயர்தலாகும்.*

*எண்ணெழுத்து இகழேல், ஓதுவது ஒழியேல், நூல் பல கல் என்ற முதுமொழிகள் கல்வியின் அவசியத்தினை இயம்புகிறது. கல்வி கற்பதற்காக குருவின் இல்லம் தேடிச் சென்று ஆயகலைகளைக் கற்றுத் தன்னை மேம்படுத்த இடம்பெயர்வு இன்றியமையாத ஒன்றாகும். புறத்திணையியலில் கற்றல், போர், தூது முதலிய காரணங்களால் பெயர்வு நிகழ்ந்தது*

*அவ்வப்போது உலகின் பல பகுதிகளில் வளர்ந்து கொண்டு இருக்கும் தொழில் நுட்பங்களை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதற்கும், தாம் கற்றிருக்கும் சிறந்த அறிவுத்திறம், தொழில் திறன் ஆகியவைகளை மற்ற நாட்டினருக்குக் கொடுப்பதற்கும் வாழ்க்கைத் துணையைப் பிரிந்து செல்லும் ஒழுக்கம் ஓதல் பிரிவு.*

**தூதுப்பிரிவு**

*தூதர் என்ற சொல்லுக்கு வினையுரைப்பாரும் வழியுரைப்பாரும் பண்புரைப்பாரும் தூதர் என்று சேந்தன் திவாகரம் பொருள் தருகிறது. நாடுகளுக்கு இடையில் இருக்கும் பகைமையைப் போக்குவதற்காகச் செல்வதும், நட்பை வளர்ப்பதற்காக ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குச் செல்வதும், ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கு இடையில் கல்வி, கலை, நாகரிகம், வணிகம், அந்த நாட்டில் நடைபெற்று வரும் அரசியல் முதலியவற்றுக்கு உதவி செய்வதற்காகச் செல்வதும், அந்த நாட்டில் நடைபெறும் வேறு பல நிகழ்ச்சிகளைப் பற்றி அவ்வப்போது தம்முடைய நாட்டுக்குத் தெரிவித்து இரண்டு நாடுகளின் நட்பை வளர்ப்பதற்காக தூதராகச் சென்று பணி ஆற்றுவதும் தூதுப்பிரிவு.*

*தொண்டை நாட்டை ஆண்ட வேந்தன் தொண்டைமான். அதியமானிடம் பகைமை கொண்டான். தன்பால் படைவலி மிக்கிருப்பதாக எண்ணி அவ்வேந்தன் செருக்குற்றான். அவனது அறியாமையை அறிந்த அதியமான், போரின் கொடுமையையும், அதன்கண் அவன் வலியிழந்து கெடுவதன் உறுதியையும், அதனால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நேரும் கோட்டையும் தெளிந்து கொள்ளுமாறு அறிவித்தற்கு ஔவையாரை அவன்பால் தூது விட்டான் அவன்பால் சென்று வஞ்சிப்புகழ்ச்சியில் பாடலைப் பாடினார் ஔவையார்.*

***இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்***
***கண்டிர ணோன்காழ் திருத்திநெய் யணிந்து***
***கடியுடை வியனக ரவ்வே யவ்வே***
***பாகவர்க் குத்தி கோடுநுதி சிதைந்து***
***கொற்றறைக் குற்றில மாதோ . ! (புறநானூறு- 95)***

*கோவூர்கிழார் எனும் புலவர் தூதாகச் சென்று நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி பகையை நீக்கி சமாதானம் செய்வித்தமையைப் புறப்பாடல் சுட்டுகிறது. உன்னுடன் போர் புரிவன் சேரனுமில்லை, பாண்டியனுமில்லை. நீயும் அத்தி மாலை சூடியவன் உன்னை எதிர்த்துப் போர் புரிபவனும் அத்தி மாலை சூடியவன் எவர் தோற்றாலும் தோற்பது சோழர் குடியே என்று எடுத்துக்கூறி இருவரையும் சமாதானம் செய்து வைத்தார்.*

**தொகுப்புரை**

*அன்றிலிருந்து இன்று வரை இடம்பெயர்வு என்பது எல்லா காலத்திலும் நடைபெற்று வருகிறது. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்ற பாரதியாரின் பல்வேறு இடங்களுக்குச் சென்று நம்முடைய பண்பாட்டையும்; கலாசாரத்தையும் கடைபிடித்து தாய் நாட்டு அன்போடும் மொழிப்பற்றோடும் நல்வாழ்வு வாழ்கின்றார்கள்*

**பார்வை நூல்கள்**


1. *சங்க இலக்கியம் மூலமும் உரையும் (எட்டுத்தொகை)-வர்த்தமானன் பதிப்பகம் சென்னை*
2. *தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்-சோமலே- நேஷனல்புக் டிரஸ்ட்*
3. *பண்டைய தமிழ் நாகரீகமும் பண்பாடும்-தமிழ் வளர்ச்சி இயக்கம் சென்னை*


## References


1. Sangha Literature Source and Text (Eight Volume) -Varthamanan Publishing House Chennai.
2. Tradition and Culture of the People of Tamil Nadu - Somali - National Book Trust.
3. Ancient Tamil Civilization and Culture-Tamil Development Movement Chennai.